பங்கேற்போம் ! உரிமையை நிலைநாட்டுவோம் !

அருணோதயா குழந்தைகள் சங்க கூட்டமைப்பு

ARUNODHAYA Children Sangam

# சிட்டெறும்பு பேசுது

*தனிச் சுற்றுக்கு மட்டும்

உயிர் : 03
குரல் : 01

ஜனவரி 2025 – மார்ச் 2025




## தேர்வுக்கு தயாராவோம் !

அருணோதயா
குழந்தை தொழிலாளர் மையம்

# சிட்டெறும்பு பேசுது

உயிர் : 03 | குரல் : 01

ஜனவரி – மார்ச் 2025

**ஆசிரியர்கள்**

L. யுவராணி, V.சுஜிதா, S.ஜிஷ்ணு, K.நிஷாந்த்

**இணை ஆசிரியர்கள்**

G. லட்சுமிபிரியா, D. சந்தோஷ், M. சாதனா A.சஞ்சய். G.அபிநயா. J.ஐஸ்வரியா

**உதவி ஆசிரியர்கள்**

G. லட்சுமிபிரியா, M. சுஹாசினி. P. தமிழ், S. லோகேஷ், V. சுஜிதா, S. தங்கவித்யா, S.சக்தி முருகன், R. கன்னியம்மா, M. யுவராஜ்,

**நிருபர்கள்**

S. நிவிஸ், A. ஹேமன், V. நாகராணி, S. ஓவியா, D. ரொபினா, M. ஜெனிலியா S. தங்கவித்யா, S.சக்தி முருகன், R. கன்னியம்மா, M. யுவராஜ்,

**ஓவியர்கள்**

S.விஷால், H. மோகித், D.கவியரசன்,S.தர்ஷன், H. சக்திராஜன், P. தனுஷ். D.அஷ்வின் A.முஹம்மது சுல்தான், P.S. பத்மேஷ்

**நிர்வாகம்**

முனைவர்.வர்ஜில் டி சாமி
நிர்வாக இயக்குநர்

**ஒருங்கிணைப்பு**

திருமதி. செ. செல்வி
குழந்தை பங்கேற்பு கருத்தியல் வழிநடத்துனர்

**வடிவமைப்பு**

S. விஷால், K. நிஷாந்த், L. யுவராணி, S.ஜிஷ்ணு,

வடிவமைப்பில் உதவி. திரு.G. டான்போஸ்கோ,

**தொடர்பு முகவரி**

அருணோதயா குழந்தை தொழிலாளர் மையம்
19/9/2, பஜார் தெரு. இராயபுரம்
சென்னை – 600013
**Phone** : 044-42632264
**Mobile** : 9444051529, 8925274527

**மின்னஞ்சல்**

arunodhayaorg@gmail.com

**இணையதளம்**

www.arunodhayacentre.in


## ஆசிரியர் உரை

**நண்பர்களே!!**

**உங்கள் அனைவருக்கும் என் அன்பான வணக்கங்கள்!!**

ஒரு நல்ல செய்தி தெரியுமா உங்களுக்கு? நம் சிட்டெறும்பு பேசுது இதோ வெளிவந்து விட்டது.

நாம் சரியான நேரத்தில் சரியான தலைப்பை தேர்ந்தெடுத்தோம்!!

வாங்க நண்பர்களே!! தேர்வுக்கு தயார் ஆவோம்!! இந்த தலைப்பிற்கு தகுந்தார் போல் அனைவரும் தங்கள் தேர்வு அனுபவங்களை கதை, கட்டுரை, ஓவியம் போன்ற வடிவில் தந்து நமது ஆறாம் இதழை சிறப்பாக வெளியிட உதவி செய்தீர்கள் அதன் பயனாக இதோ வந்து விட்டது சிட்டெறும்பு இதழ்!!

சரி நாம் நம் தேர்வு அனுபவங்களை எழுதி விட்டோம். இப்பொழுது குழந்தைகளாகிய நாம் என்ன செய்ய வேண்டும்?

நன்றாக படித்து வரும் தேர்வில் நல்ல மதிப்பெண்கள் பெற்று, வெற்றி பெற வேண்டும். இது நம் தலையாய கடமையாக உள்ளது.

நம் இலட்சியத்தை அடைய வேண்டுமென்றால் நாம் கடினமாக படித்து அதிக மதிப்பெண் எடுக்க வேண்டியது மிகவும் அவசியமாக உள்ளது. அப்போது தான் நாம் விரும்பும் துறையில் சேர்ந்து படிக்க வாய்ப்பாக அமையும்.

மேலும் பெற்றோர்கள், ஆசிரியர்கள், நண்பர்களிடம் நம் சந்தேகங்களை கேட்டு தெரிந்து கொள்வோம். குழுவாக இணைந்து படிப்போம். அதிகாலை நேரத்தில் எழுந்து படிப்போம்.

தேர்வு எழுதப்போகும் இந்நேரத்தில் நாம் ஆரோக்கியமான சத்தான உணவுகளை சாப்பிடவேண்டும். சுத்தம், சுகாதாரத்தை கடைபிடிப்பதும், நம் உடல் நலனைப் பேணுவதிலும் கவனம் காட்டுவது அவசியம்.

அரசு பொதுத்தேர்வு எழுதும் அனைத்து நண்பர்களுக்கும் என் வாழ்த்துக்களை தெரிவித்து கொள்கின்றேன். தேர்வில் சிறப்பாக செயல்படுங்கள்!! வெற்றிகரமாக தேர்வு எழுதி விட்டு வாருங்கள். மீண்டும் அடுத்த இதழில் சந்திப்போம்.

**“கல்வி அழியாத செல்வம்!!
அச்செல்வத்தை அடைய
அயராது கற்போம்”**



**S. ஜிஷ்ணு**
10 ஆம் வகுப்பு. எண்ணூர்

# அருணோதயா குழந்தைகள் சங்க கூட்டமைப்பு செயல்பாடுகள்

(ஜனவரி – மார்ச் 2025)

## குழந்தைகள் சங்க மூன்று மாத செயல்பாடு

| வரிசை எண் | மாதம் | பேசப்பட்ட கருத்துக்கள் |
|---|---|---|
| 1 | ஜனவரி | நகரசபை கூட்டம், தேசிய பெண் குழந்தைகள் தினவிழா திட்டமிடல் |
| 2 | பிப்ரவரி | செயற்குழு கூட்டம் குறித்து தகவல் அளிக்கப்பட்டது. குழந்தை பாலியல் வன்முறை குறித்த கலந்தாய்வு நடைபெற்றது |
| 3 | மார்ச் | பொதுத்தேர்வு எழுதும் குழந்தைகள் தகவல் மற்றும் தொடர் கண்காணிப்பு குறித்து கலந்துரையாடல் |

### ஜனவரி மாத செயல்பாடுகள்

**12.01.2025** அன்று திருவொற்றியூர் குழந்தைகள் சங்க குழந்தைகள் புகையில்லா போகி குறித்து பகுதியில் உள்ள மக்களுக்கு விழிப்புணர்வை ஏற்படுத்தினார்கள். இதில் 30 குழந்தைகள் பங்கேற்றார்கள்.

குழந்தை கவுன்சிலர்கள் கூட்டம் பத்து வார்டுகளில் நடைபெற்றது. இக்கூட்டத்தில் 50 குழந்தைகள் பங்கேற்றனர். இக்கூட்டத்தில் நகரசபை திட்டமிடல், நிறைவேற்றப்பட்ட கோரிக்கைகள் மற்றும் நிறைவேற்றப்படாத கோரிக்கைகள் தயாரிப்பது குறித்து திட்டமிடப்பட்டது.

ஜனவரி மாதம் அரசு நடத்திய குடியரசு தினவிழா கொண்டாட்டத்தில் அருணோதயா குழந்தைகள் சங்க குழந்தைகள் கலந்து கொண்டு பரத நாட்டியம் ஆடி அனைவரையும் மகிழ்வித்தனர், மாண்புமிகு தமிழக மேயர் செல்வி.. பிரியா அவர்களிடம் பரிசுகளையும் பாராட்டுகளையும் பெற்றனர்.



ஆர்.ஆர்.நகர் பகுதியில் குழந்தைகள் சங்க பெற்றோர் கூட்டம் நடைபெற்றது. பதினைந்து பெற்றோர்கள் கலந்து கொண்டனர். குழந்தைகள் சங்க நோக்கம், குறிக்கோள், அதன் செயல்பாடுகள் குறித்து பேசப்பட்டது.



நகரசபை கூட்டம் பத்து வார்டுகளிலும் நடைபெற்றது. இதில் சிறப்பு விருந்தினர்களாக மாமன்ற உறப்பினர், பகுதிதலைவர், காவல் துறையினர் கலந்து கொண்டனர். குழந்தைகள் பகுதி பிரச்சனைகளை கோரிக்கைகளாக தயாரித்து மாமன்ற உறுப்பினர்களிடம் வழங்கினார்கள். இதில் அப்பகுதியில் உள்ள 800 குழந்தைகள் பங்கேற்றனர்.

**25.01.2025** அன்று 38 வது வார்டில் குழந்தைகள் நகரசபை கூட்டம் மற்றும் வார்டு அளவிலான குழந்தைகள் பாதுகாப்பு குழு அறிமுகம் நடைபெற்றது. இதில் சிறப்பு விருந்தினராக மாவட்ட குழந்தைகள் பாதுகாப்பு அலுவலர், வருவாய் அலுவலர், பள்ளி தலைமை ஆசிரியர், ஆரம்ப சுகாதார மையம் செவிலியர், அங்கன்வாடி ஆசிரியர், குழந்தைகள் நலகாவல் அலுவலர் கலந்து கொண்டனர்.

குழந்தைகளின் கோரிக்கைகள் வழங்கப்பட்டது. வார்டு அளவிலான குழந்தைகள் பாதுகாப்பு குழு உறுப்பினர்கள் அறிமுகப்படுத்தப்பட்டனர் .நூறு குழந்தைகள் கலந்து கொண்டனர்.

**24.01.2025** தேசிய பெண் குழந்தைகள் தினம் அன்று அனைத்து மண்டலங்களிலும் உள்ள சென்னை மாநகராட்சி பள்ளிகளில் நடைபெற்றது. ஆண் குழந்தைகள் பெண் குழந்தைகளுக்கு வாழ்த்து தெரிவித்தார்கள்.


## பிப்ரவரி மாத செயல்பாடுகள்

**03.02.2025** அன்று மது மற்றும் புகையிலை பொருட்கள் எந்த கடையிலும் விற்கக்கூடாது என்று 38 வது வார்டில் விழிப்புணர்வு ஸ்டிக்கர் பெட்டி கடைகளில் ஒட்டப்பட்டது. இந்த செயல்பாடு வார்டு அளவு குழந்தைகள் பாதுகாப்பு குழுவில் திட்டமிடப்பட்ட செயல்பாடு ஆகும். போதை தடுப்பு குறித்து விழிப்புணர்வு ஸ்டிக்கர் கடைகளில் ஒட்டியவுடன் நாங்கள் யாரும் இப்பொழுது விற்பதில்லை இனியும் விற்க மாட்டோம் என்று கூறினார்கள். பட்டேல் நகர் பள்ளிக்கு அருகில் உள்ள கடைகளில் ஒட்டப்பட்டுள்ளது. அடுத்து சாஸ்திரி நகர் பகுதியில் ஒட்டலாம் என்று முடிவு எடுக்கப்பட்டுள்ளது.






**03.02.2025** அன்று குழந்தைகளால் கதை எழுதி குழந்தைகளே நடித்த அமிரா என்ற ஆண், பெண் சமத்துவம் குறித்த விழிப்புணர்வு குறும்படம் அருணோதயா Youtube ல் வெளியிடப்பட்டது,




**10.2.2025** அன்று அருணோதயா குழந்தைகள் சங்க கூட்டமைப்பு செயற்குழு கூட்டம் இணையதளம் வழியாக நடைபெற்றது. இதில் பள்ளியில் குழந்தைகள் வன்முறை குறித்தும், மற்றும் அதற்கு தீர்வு காணும் வகையில் கோரிக்கைகளும் தயார் செய்யபட்டது.




**14.02.2025** அன்று பள்ளியில் குழந்தைகள் வன்முறை குறித்து குழந்தைகள் சங்க குழந்தைகள் முதலமைச்சரின் தனிப்பிரிவில் அருணோதயா குழந்தைகள் சங்க கூட்டமைப்பு சார்பில் மனு அளிக்கப்பட்டது.

## மார்ச் மாத செயல்பாடுகள்

**01.03.2025** அன்று முகமூடி என்ற மொபைல் அடிமை குறித்த விழிப்புணர்வு குறும்படம் வெளியிடப்பட்டது.

**26.03.2025** அன்று கார்கில் நகர் பகுதி **CCRMC** உறுப்பினர்கள் பகுதியில் உள்ள கஞ்சா விற்பனை, தண்ணீர் பிரச்சனை, சாலை வசதி போன்ற பிரச்சனைகள் குறித்து மாமன்ற உறுப்பினர் திரு கார்த்திக் அவர்களை நேரில் சந்தித்து மனு கொடுத்துள்ளனர். இதில் குழந்தைகள் சங்க குழந்தைகளும் கலந்து கொண்டனர். பிரச்சனைகளை தீர்க்க உடனே நடவடிக்கை எடுப்பதாக உறுதி அளித்துள்ளார்.



**K. ஷர்மிளா**
12 ஆம் வகுப்பு, திருவொற்றியூர்

**26.3.2025** அன்று பாரதி நகர் **CCRMC** கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்தில் குடிநீரில் கழிவு நீர் கலந்து வருவது குறித்து பேசப்பட்டது. அங்கன்வாடி சீரமைக்கப்படாமல் இருப்பது குறித்தும் பேசப்பட்டது பாரதி நகர் அடுக்குமாடி குடியிருப்பு பகுதிகளில் போதை அதிகமாக இருப்பதால் போலீஸ் தினசரி ரோந்து வரவேண்டும் என்று பேசப்பட்டது. குழந்தைகள் பாதுகாப்பு குழு கூட்டத்தில் நடைபெற்ற தகவல்களும் பரிமாறப்பட்டது. அனைத்து பிரச்சனைகளும் மக்களே எடுத்து செய்வதற்கு முன்வர வேண்டும் என்று கூறப்பட்டது. மாமன்ற உறுப்பினரை சந்தித்து மனு அளிப்பதாக கூட்டத்தில் பேசி முடிவு எடுத்துள்ளார்கள். இந்த செயல்பாட்டில் குழந்தைகள் சங்க குழந்தைகள் பங்கேற்றனர்.



# குழந்தை திருமணம் நாட்டிற்கு அவமானம்

ஒரு அழகிய கிராமத்தில் ஒரு சிறிய குடும்பம் .அம்மா, அப்பா, இரண்டு பெண் குழந்தைகள் என மகிழ்ச்சியாக வாழ்ந்து வந்தனர். அக்காவின் வயது 15, தங்கையின் வயது 11. அப்பா விவசாயம் செய்து தான் குடும்பத்தை நடத்தி வந்தார். நாளடைவில் அவரால் விவசாய வேலை செய்ய முடியவில்லை, வீட்டில் வறுமை அதிகமானது. ஒருவேளை சாப்பாடு கிடைப்பதே அரிதாக இருந்தது .கவலையாக இருந்த அப்பா சாலையில் நடந்து சென்று கொண்டிருந்த போது அவர் நண்பரை சந்தித்தார்.

**கோபு:** அடே பாபு என்ன எதையோ நினைத்து கொண்டு வண்டி வருவது கூட தெரியாமல் நடந்து கொண்டு இருக்கிறாய்!

**பாபு:** அடே கோபு எப்படி இருக்கிறாய்? பார்த்து நீண்ட நாள் ஆகி விட்டது?

**கோபு:** நான் நன்றாக இருக்கின்றேன்! நீ தான் எதோ கவலையாக இருப்பது போல தெரிகிறது!

**பாபு:** எனக்கு வேலையில்லை. வீட்டில் வறுமை. எனது இரண்டு பெண் குழந்தைகளை நான் எவ்வாறு கரை சேர்க்க போகிறேன் என்று தெரியவில்லை!

**கோபு:** உன் பெரிய பெண்ணிற்கு வயது 15 ஆகிவிட்டது அவளுக்கு திருமணம் செய்து வைத்துவிடு, எனக்கு தெரிந்த ஒரு பையன் இருக்கான். அவனுக்கு 35 வயது தான், நல்ல வசதியானவன். நீ உன் பெண்ணுக்கு ஏதும் செய்ய வேண்டாம், உன் இரண்டாவது பெண்ணை சிறிது நாள் பள்ளியை விட்டு நிறுத்தி வேலைக்கு அனுப்பு உன் வறுமை கொஞ்சம் குறையும்.

**பாபு:** சரி நான் வீட்டில் பேசி முடிவு எடுக்கின்றேன் கோபு நான் போயிட்டு வரேன்

**( பாபு வீட்டில் மனைவியிடம் பேசினான்) கமலா நம் பெரிய பெண்ணுக்கு திருமணம் செய்து விடலாம், நல்ல வரன் வந்துருக்கு. நல்ல வசதியானவங்க வயசு தான் கொஞ்சம் பெரிய வயசு, பரவால்ல நம்ம பெண்ணை கரையேத்தி விடலாம். சின்ன பெண் கொஞ்ச நாள் வேலைக்கு போகட்டும்.**

**கமலா:** நம்ம பெண்ணுக்கு 15 வயது தான் ஆகுது. 35 வயது பையனை எப்படி திருமணம் முடிப்பது அவள் படிக்கட்டுங்க.

**பாபு:** எனக்கு எல்லாம் தெரியும். நீ வாயை மூடிட்டு உன் வேலையை பாரு.

**(திருமணம் நடைபெறும் நாளும் குறிக்கப்பட்டது யாருக்கும் தெரியாமல் கோவிலில் வைத்து திருமணம் செய்வதாக முடிவு செய்யப்பட்டது. பாபுவின் பெண்கள் இருவரும் மிகவும் கவலையுடன் இருந்தனர்.)**

**அக்கா;** எனக்கு திருமணம் வேண்டாம், நான் படிக்க வேண்டும் எப்படியாவது திருமணத்தை நிறுத்த வேண்டும் என்ன செய்வது ?

**தங்கை:** அக்கா என் வகுப்பில் ஒருநாள் குழந்தைகள் பாதுகாப்பு எண் 1098 குறித்து பேசினார்கள். அந்த எண்ணில் தொடர்பு கொண்டால் குழந்தைகள் பிரச்சனையை தீர்த்து வைப்பார்கள். நாம் அந்த எண்ணை தொடர்பு கொள்ளலாமா?

**அக்கா;** சரி நாம் நம் பெற்றோர்களுக்கு தெரியாமல் 1098 என்ற தொலைப்பேசி எண்ணில் தொடர்பு கொள்ளலாம்.

**(அக்கா தங்கை இருவரும் குழந்தைகள் பாதுகாப்பு எண்ணிற்கு தொடர்பு கொண்டு அவர்களின் பிரச்சனைகளை கூறினார்கள்.)**

பாதுகாப்பு அலுவலர்கள் அவர்களின் வீட்டிற்கு வந்து பெற்றோர்களை விசாரித்தார்கள். 18 வயது கீழ் உள்ள குழந்தைகளுக்கு திருமணம் செய்வது சட்டப்படி குற்றம். குற்றம் நிரூபிக்கப்பட்டால் தண்டனை உங்களுக்கு மட்டுமின்றி திருமணத்தில் சம்பந்தப்பட்ட அனைவருக்கும் உண்டு. குழந்தைகளை வேலைக்கு அனுப்புவது குற்றம் எனவே குழந்தைகளை பள்ளிக்கு அனுப்புங்கள் என்று கூறினார்கள். மிரண்டு போன பெற்றோர் நாங்கள் செய்ய நினைத்தது தவறு என்று புரிந்து கொண்டோம் இனி அப்படி செய்யமாட்டோம் என்று மன்னிப்பு கேட்டனர்.

தைரியமாக உங்கள் பிரச்சனையை கையாண்ட உங்களுக்கு பாராட்டுகள் என்று பாராட்டினார்கள். இரண்டு குழந்தைகளும் மறுநாள் பள்ளிக்கு சென்றனர்.

குழந்தைகளே நீங்களும் குழந்தைகள் பாதுகாப்பு எண் பயன்படுத்தி உங்களை பாதுகாத்து கொள்ளுங்கள்.



**D. சந்தோஷ்**
12 ஆம் வகுப்பு, கொருக்குப்பேட்டை

# மாறியது மனம்

எனக்கும் எனது நண்பனுக்கும் தேர்வு என்றால் பயம். ஆனால் எனது ஆசிரியர் தேர்வுக்கு நன்றாக படிக்கச் சொன்னார். நாங்கள் இருவரும் வீட்டுக்கு சென்றோம். நான் எனது ஆசிரியர் சொன்னபடி இரவு ,பகல் பார்க்காமல் படித்தேன்..

ஆனால் என் நண்பன் படிக்கவில்லை. மறுநாள் காலை தேர்வு நடைபெற்றது. தேர்வில் நான் படித்த வினாக்கள் வந்திருந்தது .எனக்கு மிக்க மகிழ்ச்சியாக இருந்தது.

நான் எதிர்பார்த்த தேர்வு முடிவு வந்தது. அதிக மதிப்பெண் பெற்று நான் தேர்வில் தேர்ச்சி அடைந்தேன். என் நண்பன் தேர்வில் வெற்றி பெறவில்லை. அவன் மிகவும் வருத்தத்துடன் இருந்தான்.



A. சஞ்சய்
10 ஆம் வகுப்பு, திருவொற்றியூர்

யாரிடமும் பேசுவது இல்லை, தனிமையில் ஏதாவது யோசித்துக் கொண்டு இருந்தான். நண்பா ஏன் இப்படி தனிமையில் இருக்கின்றாய் என்று நான் கேட்டேன். எனக்கு வாழவே பிடிக்கவில்லை என்றான். தோல்வி என்பது நிரந்தரம் இல்லை, மீண்டும் முயற்சி செய்து படித்தால் நிச்சயமாக வெற்றி அடையலாம். உனக்கு கவலையாக இருந்தால் அருணோதயா ஆலோசகர் மேடமிடம் பேசு அவர்கள் உனக்கு நல்வழி காட்டுவார்கள் என்றேன்.

ஆலோசகரிடம் பேசிய பிறகு நண்பன் தெளிவு பெற்றான். மனம் தெளிவு பெற்று மனம் திருந்தி நான் தவறு செய்து விட்டேன் இனி ஆசிரியர் சொல் கேட்டு நடப்பேன் அடுத்த முறை நன்றாக தேர்வு எழுதி தேர்ச்சி பெறுவேன் என்று கூறினான்.

உங்களுக்கோ உங்கள் பகுதி மற்றும் பள்ளி நண்பர்களுக்கோ குழப்பமான மனநிலை இருந்தால் உடனே அருணோதயாவின் ஆற்றுப்படுத்துதல் மற்றும் குணப்படுத்துதல் மையத்தை தொடர்பு கொண்டு ஆலோசனை பெறவேண்டும்.

## பாடல்

கொக்கு ஒன்று ஏரி அருகே
மீனுக்காக காத்து கொண்டு இருந்தது(2)
மீன்குஞ்சி ஒன்று துள்ளி குதித்து
தண்ணீரில் நீந்தி வந்தது
காத்திருந்த கொக்கு மீனை பிடிக்கச் சென்றது
அதை பார்த்த மீனின் அம்மா மீன் குஞ்சியை
காப்பாற்றியது.
கொக்கு ஏமாந்து போனது(2)






V. சுஜிதா
12 ஆம் வகுப்பு, தண்டையார்பேட்டை

## ஹை கூ கவிதை

**நடு ரோட்டில் அடிபட்டு**
**துடி துடித்தது**
**வண்ணத்து பூச்சி 108**
**ஆம்புலன்ஸ் வருமா?**



A. லோகிதா
10 ஆம் வகுப்பு, தண்டையார்பேட்டை



# அர்ஜீனின் கனவு

ஒரு நாள் இரவில் அர்ஜுன் தூங்கிக் கொண்டிருந்தான். அப்போது அவனுக்கு ஒரு வித்தியாசமான கனவு வந்தது.

**கனவில் பள்ளிக் கூடம்:** அவன் கனவில், ஒரு அடர்ந்த காட்டில் ஒரு பள்ளிக்கூடம் இருந்தது. அதில் சிங்கம் ஒரு ஆசிரியராக இருந்தார். ஆசிரியர் அனைவரிடமும் அறிவித்தார்: "தேர்வு நாள் வருகிறது! தயாராகுங்கள்!"

அதைக் கேட்ட அணில், தனது நண்பன் மானிடம் தேர்வு வருகிறது என்று நமது ஆசிரியர் சொல்லிவிட்டார். வா நாம் இப்போதே படிக்கத் தொடங்கலாம். நண்பா எனக்கு பயமாக உள்ளது. என் அம்மா நான் நன்றாக படித்து அதிக மதிப்பெண் எடுக்க வேண்டுமென கண்டிப்பாக கூறியுள்ளார். இந்த தேர்வில் அதிக மதிப்பெண் எடுக்க வேண்டும். நீ சொல்வது சரிதான் நாம் உடனே படிக்க ஆரம்பிக்கனும். நமது நண்பன் நரியையும் சேர்த்து கொள்ளலாம் குழுவாக சேர்ந்து படிக்கலாம் என்றது மான்.

அணிலும், மானும் தங்கள் நண்பன் நரியிடம் சென்று கூறினார்கள்: " வா நண்பா, ஆசிரியர் தேர்வு வரும் என்று கூறினார். நாம் சேர்ந்து படிக்கலாம்.

" நரி சொன்னது நான் உங்களை போல் இல்லை புத்திசாலி தினமும் படிக்க மாட்டேன். நன்றாக விளையாடுவேன். தேர்வுக்கு இரண்டு நாட்கள் முன்னாடி தான் படிப்பேன் .இப்போது நான் மகிழ்ச்சியாக இருக்க விரும்புகின்றேன் என்றது.

**தேர்வு நாள்:**


அணிலும் மானும் தேர்வுக்கு நன்றாகத் தயாரானார்கள். தேர்வை நன்றாக எழுதினார்கள். ஆனால் நரி தயாராகாமல் போனதால், தேர்வில் சரியாக எழுத முடியவில்லை. நரி வருத்தத்துடன் கூறியது:

“நீங்கள் முன்பே கூறினீர்கள் படிக்கலாம் என்று. நான் அப்போது பயப்படவில்லை. ஆனால் இப்போது புரிகிறது. " முயல் நரியிடம் கூறியது கவலைப்படாதே மறுமுறை தேர்வு எழுத இன்றே தயாராகு நண்பா என்று கூறியது.

திடீரென அர்ஜுன் கண் விழித்தான். அச்சச்சோ நானும் அன்றாடம் பாடங்களை படிக்காமல் உள்ளேன். இன்று முதல் படிக்க வேண்டும். கனவில் வந்த நரிபோல நாம் தேர்வில் தோல்வி அடைய கூடாது என்று மனதிற்குள் தீர்மானம் எடுத்தான்.



**A. சஞ்சய்**
10 ஆம் வகுப்பு, திருவொற்றியூர்



# கவர்ஸ்டோரி

## "முயற்சி செய்து பயிற்சி செய்தால் வெற்றி நிச்சயம்"

நண்பர்களே இந்த வயதில் நாம் என்ன செய்ய வேண்டும்? நம் கடமை என்னவென்று தெரியுமா! இலட்சியத்தை அடைந்து வாழ்வில் முன்னேற வேண்டும். அதற்கு கல்வி ஒரு கருவியாக உள்ளது. நாம் அறிந்ததே! நாம் அனைவரும் நன்றாக படித்து வரும் தேர்வில் அதிக மதிப்பெண் எடுத்து தேர்ச்சி பெறுவது மிகவும் முக்கியம்.

**தேர்வு என்றால் என்ன?**

தேர்வு என்பது நம் பள்ளியில் படிக்கும் கல்வியை எந்த அளவுக்கு புரிந்து கொண்டோம் என்பதனை அறிவதற்காக நடத்தும் ஒரு பயிற்சி. அது தான் தேர்வு. தேர்வுகள் பல இருக்கின்றன உதாரணமாக அரசு தேர்வுகள், TNPSE, CLAT, UPSE போன்ற தேர்வுகள், இவைகளின் மூலம் நாம் ஒரு உயர்ந்த பதவியை அடையலாம்.

**பயம்**

பெரும்பாலும் அனைத்து மாணவர்களும் பயப்படுவது பொதுத் தேர்வை கண்டு தான். அதுவும் பத்தாம் வகுப்பு படிக்கும் மாணவர்கள் முதன் முதலில் பொதுத்தேர்வு எழுதப் போகிறீர்கள். தேர்வைக் கண்டு அஞ்சக் கூடாது. பயந்தால் நாம் தேர்வில் கவனம் செலுத்த முடியாது என்பது உண்மை. பதற்றம் அடையாமல் தேர்வை எழுத வேண்டும். நம் நண்பர்களையும் நாம் உற்சாகப்படுத்த வேண்டும்.

**தேர்வுக்கு தயாராவது எப்படி?**


தேர்வுக்கு தயாராவதற்கு பலவழிகளை நாம் கடைபிடிக்க வேண்டும். அவை என்னவென்று பார்ப்போம்.

**நேரத்தை கடைப்பிடித்தல்**

நாம் முதலில் நேரத்தை வீணாக்கக் கூடாது. இருக்கும் நேரம் முடிந்தால் நமக்கு திரும்ப வர வாய்ப்பில்லை. அதனால் அந்த பொன்னான நேரத்தை நாம் நல்ல முறையில் பயன்படுத்த வேண்டும். கடைசி நேரத்தில் அனைத்தையும் படிக்குமாறு ஆகிவிடும்.

**படிக்கும் முறை**

- பாடங்களை குறிப்பெடுத்து படிக்க வேண்டும்
- மனப்பாடம் செய்யாமல் புரிந்து படிக்க வேண்டும்
- அதிகாலை நேரத்தில் படித்தல் நன்று.
- நண்பர்களுடன் சேர்ந்து குழுவாக படிக்கலாம்




**உடல் நலம்**

நமக்கு நம் உடல் நலம் முக்கியம். விடிய விடிய கண் விழித்து படித்து விட்டு தேர்வு அறையில் தூங்கி விழக் கூடாது. அவ்வாறு செய்வது நமக்கு களைப்பைத் தரும். அதுமட்டுமில்லாது நமக்கு படிப்பது எல்லாம் மறந்து விடும். அதனால் தேர்வு வரும் போது மட்டும் அனைத்தையும் படிக்காமல் தினமும் சிறிது சிறிதாக படிக்க வேண்டும். காலையில் படித்தால் நமக்கு நினைவு இருக்குமென்பது அறிவியல் உண்மை. ஆரோக்கியமான உணவை சாப்பிட வேண்டும்.

**பாதுகாப்பு**

நாமும் பாதுகாப்பாக இருக்க வேண்டும். நம் புத்தகங்கள், தேர்வு நுழைவு சீட்டு, பேனா, தண்ணீர் பாட்டில் போன்றவற்றை பாதுகாப்பாக வைத்திருப்பது நம் கடமை ஆகும்.

நண்பர்களே நாம் அனைவரும் நன்றாக தேர்வு எழுதி நல்ல மதிப்பெண் எடுப்போம் என்று உறுதி எடுத்துக் கொள்ளலாம்.

**"முயற்சி உடையார்
இகழ்ச்சி அடையார்"**



S. ஜிஷ்ணு
10 ஆம் வகுப்பு. எண்ணூர்

# தேர்வு குறிப்புகள் (Tips)

**சீக்கிரமாக படிக்கத் தொடங்குங்கள்:**




- ★ வகுப்பில் நடத்திய பாடத்தை மறுபரிசீலனை செய்ய உங்களுக்கு போதுமான நேரத்தை ஒதுக்குவது அவசியம். அது உங்களுக்கு தேர்வு நேரத்தில் உதவும்.
- ★ குழுவாக சேர்ந்து படிப்பது நல்லது. அது உங்களுக்கு ஒரு ஆர்வத்தை உண்டாக்கும். இது பாடத்தை பற்றிய உங்கள் நினைவை புதுப்பிக்கும். மேலும் நீங்கள் கற்றுக் கொண்டதை நினைவில் வைத்துக் கொள்ள உதவும்.
- ★ தினமும் கொடுக்கும் வீட்டுப்பாடத்தை அன்றே படிக்க வேண்டும். பள்ளிக்கு விடுப்பு எடுக்காமல் தொடர்ந்து செல்ல வேண்டும். ஆசிரியர் நடத்தும் பாடத்தை கவனிக்க வேண்டும்.
- ★ தெரியாத சந்தேகங்களுக்கு நண்பர்கள் மற்றும் ஆசிரியர்களிடம் கேட்டு தெரிந்து கொள்ள வேண்டும்.
- ★ நண்பர்களோடு சேர்ந்து கூட்டமாக படித்தால் நமக்கு தெரியாத சில பதில் இன்னொரு நண்பரிடம் கற்றுக் கொள்ளலாம்.
- ★ அதிகாலை 5 மணிக்கு எழுந்து படித்தால் ஞாபக சக்தி அதிகரிக்கும்.
- ★ மனப்பாடம் செய்யாமல் பாடங்களை புரிந்து படிக்க வேண்டும்.
- ★ மேலும் தேர்வு நேரத்தில் நமது ஆரோக்கியம் காப்பது மிகவும் அவசியம். சுத்தமான சுகாதாரமான ஆடைகளை அணிய வேண்டும். சத்தான உணவுகளை உண்ணவேண்டும். சிறிதளவு ஓய்வு எடுப்பதும் அவசியம்.
- ★ தொலைக்காட்சி மற்றும் கைபேசியில் நேரத்தை செலவழிப்பதை தவிர்க்க வேண்டும்.
- ★ வெளியூர் செல்வது, பொழுது போக்கு நிகழ்வுகளில் கலந்து கொள்வதை தவிர்க்க வேண்டும்.



**D. கவியரசு**
9 ஆம் வகுப்பு. கொருக்குப்பேட்டை

# புதியபாதை

என் பெயர் புகழேந்தி. நான் ஜே ஜே நகர் பகுதியில் வசித்து வருகிறேன். எங்கள் பகுதியை பார்த்தால் நீங்கள் வியந்து தான் போவீர்கள். ஏனென்றால் இப்படியொரு பகுதியில் எப்படி வாழ்கிறார்கள் என்று ! குடிசை வீடு, அதிலும் மழை பெய்தால் ஒழுகும் நிலையில் ! பாதி நேரம் மின்சாரம் இருக்காது, குப்பைகள் வாரப்படுவது இல்லை, எப்பொதும் சேறும் சகதியுமாய் இருக்கும்.

அப்பா மீன் பிடித்து அதனால் வரும் வருமானத்தை முக்கால் வாசி குடிக்க பயன்படுத்தி விட்டு மீதி இருப்பதை கொடுப்பார், ஒரு வேளை தான் உணவு, சரியான துணி மணிகள் இல்லை. இந்நிலையில் எப்படி நான்படிக்க முடியும். நானும் எட்டாம் வகுப்போடு என் படிப்பை நிறுத்தி விட்டேன்.

ஒரு வருடம் பள்ளி செல்லவில்லை. கடலோரம் சென்று விளையாடுவேன். இப்படியே பொழுதை போக்கி கொண்டு வந்தேன். ,இந்நிலையில் தான் அருணோதயா பணியாளர்கள் எங்கள் பகுதிக்கு வருகை புரிந்து பள்ளிக்கு செல்லாத குழந்தைகள் கணக்கெடுப்பு செய்தனர். அதில் நான் உட்பட 3 குழந்தைகள் பள்ளிக்கு செல்லவில்லை என்பதை கண்டறிந்தனர். என்னிடம் பேசுவதற்காக வருவார்கள் நான் ஓடி விடுவேன். என்னிடம் அன்பாக யாரும் பேசியது இல்லை. வறுமையின் காரணமாக அம்மா எப்போதும் எரிந்து விழுவார். ஆனால் அருணோதயாவில் இருந்து பொண்ணுத்தாய் என்ற பணியாளர் எங்கள் பகுதிக்கு வந்தார். குழந்தைகள் அனைவரிடமும் அன்பாக பேசி கூட்டங்கள் போடுவார். கூட்டங்கள் நடக்கும் போது தூரத்தில் நின்று கவனிக்க ஆரம்பித்த நான் நாளடைவில் அருகில் சென்று பார்க்க ஆரம்பித்தேன். அவர்கள் கூட்டம் போடுவது எனக்கு பிடிக்க ஆரம்பித்தது. அதில் உள்ள விளையாட்டுகள் எனக்கு பிடிக்கும். ஒரு நாள் பொண்ணுத்தாய் மிஸ் என்னை அழைத்து உனக்கு கூட்டத்தில் கலந்து கொள்ள விருப்பம் என்றால் கலந்து கொள் என்றார். நானும் பகுதியில் நடைபெறும் கூட்டத்தில் கலந்து கொண்டேன். நீ பள்ளிக்கு போகிறாயா நான் சேர்த்து விடுகிறேன் என்றார். முதலில் மறுத்த நான் பிறகு பள்ளிக்கு செல்ல விருப்பம் தெரிவித்தேன். பிறகு ஆலோசகர் நித்தியா மேடம் அவர்கள் கல்வியின் முக்கியத்துவத்தை குறித்து எனக்கு ஆலோசனை கொடுத்தார். யோசித்தேன் வீட்டில் சுற்றி கொண்டு இருப்பதற்கு பள்ளிக்கு போகலாம் என்று முடிவெடுத்தேன். மற்ற குழந்தைகள் போல நானும் சீருடை அணிந்து கொண்டு, புத்தகப் பையுடன் பள்ளிக்கு செல்ல ஆர்வமாக உள்ளேன்.



**S. புகழேந்தி**
9 ஆம் வகுப்பு. திருவொற்றியூர்

## பாடல்

**படி படி நண்பா- நண்பி**
**தினமும் படி நண்பா- நண்பி**
**புரியும் வரைபடி நண்பா– நண்பி**
**தெளிவுடன் படி நண்பா-நண்பி**
**படித்ததை எழுது நண்பா– நண்பி**
**பிழை இல்லாமல் எழுதப் பழகு**
**நண்பா -நண்பி**
**செந்தமிழில் பேசிப் பழகு**
**நண்பா– நண்பி!!**



**S. தர்சன்**
10 ஆம் வகுப்பு. எண்ணூர்

# ரித்திக்ஷாவும் பாட்டியும்

**ரித்திக்ஷா–சில நாளாகவே யாரிடமும் எதுவும் பேசாமல் உணவு சாப்பிடாமல் கவலையாக இருந்தாள்.**

**பாட்டி** ரித்திக்ஷா ஏன் கவலையாக இருக்கிறாய் ?

**ரித்திக்ஷா** ஒன்றுமில்லை பாட்டி என்று கூறினாள்.

**பாட்டி** நீ பொய் சொல்கிறாய் எப்போதும் சிரித்து கொண்டு, விளையாடி கொண்டும் இருப்பாய். ஆனால் நீ சில நாட்களாக கவலையாக இருப்பதை நான் கவனித்து கொண்டு தான் இருக்கிறேன். என்னிடம் கூறு. நான் உனக்கு உதவி செய்கிறேன் என்று கூறினார்.

**ரித்திக்ஷா** தேர்வு தொடங்கப் போகிறது அதனால் தான்

**பாட்டி** தேர்வுக்கு நன்றாக படி இதற்கு ஏன் கவலைப்படுகிறாய் ?

**ரித்திக்ஷா** நான் சிறிதளவு தான் படித்து இருக்கிறேன். படித்தாலும் எனக்கு நினைவில் இருப்து இல்லை என்ன செய்வது என்று தெரியவில்லை. கணக்கு பாடமும், ஆங்கிலப் பாடமும் எனக்கு கடினமாக இருக்கின்றது. நான் தேர்வில் தோல்வி அடைவேன் என்று தோன்றுகிறது பாட்டி என்று அழுதாள்.

**பாட்டி** அழுவதால் எல்லாம் சரியாகி விடாது. நான் பக்கத்துக்கு வீட்டில் கல்லூரி படிக்கும் ஒரு அக்கா இருகின்றாள். அவள் நன்றாக படிப்பாள். அவளிடம் சொல்லி உனக்கு கணக்குப் பாடமும், ஆங்கிலப் பாடமும் கற்றுக் கொடுக்க சொல்கின்றேன். நீ உன் சந்தேகங்கள் கேட்டு தெரிந்து கொள். கண்டிப்பாக உனக்கு திறமை உள்ளது. நீ நன்றாக தேர்வு எழுதுவாய் என்ற நம்பிக்கை உள்ளது.

**ரித்திக்ஷா** பாட்டி நான் இன்றிலிருந்து நன்றாக படிக்கிறேன், அந்த அக்காவிடம் கற்று கொள்கிறேன்.

ரித்திக்ஷாவிற்காக தினமும் தேநீர் கொடுப்பது, அவளுடன் கண் விழித்து ஊக்கப்படுத்தி படிக்க வைப்பது போன்ற உதவிகளை பாட்டி செய்தார். தேர்வுக்கு தயாராகி ரித்திக்ஷாவும் பள்ளிக்கு சென்று. தேர்வு எழுதினார். (தேர்வு முடிந்தது.)

**ரித்திக்ஷா** ஒரே குழப்பமாக இருக்கிறது தேர்வில் நான் வெற்றி பெறுவேனா?

**பாட்டி** நீ ஏன் மிகவும் குழப்பத்துடன் இருக்கிறாய்

**ரித்திக்ஷா** பாட்டி எனக்கு தேர்வு முடிந்துவிட்டது ஆனால் நான் தேர்ச்சி அடைவேனா என்று தெரியவில்லை..

**பாட்டி** இது தானா விஷயம். நீ நிச்சயமாக தேர்ச்சி பெறுவாய் கவலைப்படாதே என்று கூறினார். ( ரித்திக்ஷாவும் பள்ளிக்கு சென்றாள்.)

**ஆசிரியர்** ரித்திக்ஷா நீ தேர்ச்சி பெற்று விட்டாய்,

**ரித்திக்ஷா** முகமெல்லாம் பூவாக மலர சிட்டாக வீட்டை நோக்கி ஓடினாள். பாட்டி, பாட்டி நான் தேர்வில் தேர்ச்சி அடைந்து விட்டேன்.

**பாட்டி** நான் தான் அப்போதே சொன்னேனே ! நீ தேர்ச்சி அடைவாய் என்று. எனக்கு மகிழ்ச்சியாக உள்ளது. உனக்கு இனிப்பு செய்து தருகிறேன்.

நம் பிரச்சனையை நம்பிக்கை உள்ளவர்களிடம் சொல்ல வேண்டும்! நம் மீது நாம் நம்பிக்கையுடன் இருக்க வேண்டும்.!!



I. ஐஸ்வரியா
9 ஆம் வகுப்பு. கொருக்குப்பேட்டை

# நிதானம் (சிறுகதை)

ஒரு ஊரில் முயலும் ஒரு ஆமையும் வாழ்ந்து வந்தது. இருவரும் பத்தாம் வகுப்பு படித்துக் கொண்டிருந்தார்கள்.

முயலுக்கு எப்போதும் தான் அழகாக இருக்கிறோம், சுறுசுறுப்பாக இருக்கிறோம் என்ற கர்வத்தில் ஆமையை ஏளனமாக பார்த்து கேலி செய்தது. அவமானப்படுத்தி வந்தது. ஆமையுடன் யாரையும் சேர விடாது. மற்ற விலங்குகளும் ஆமையின் உருவத்தை வைத்து ஒதுக்கி வைத்தனர். ஆமைக்கு நண்பர்களே இல்லை. ஆமை எப்போதும் பொறுமையாக நிதானமாகவும் இருக்கும் .அதனுடைய வேலையை சரியான நேரத்தில் செய்து முடிக்கும். நிதானமுடன் படித்து கொண்டு இருந்தது. தன்னை கேலி செய்பவர்களை குறித்து அது சிறிதளவும் கவலை கொள்ளவில்லை.

தேர்வு நெருங்கியது. முயல் நாம் நன்றாக படித்து வைத்திருக்கிறோம் தேர்வு எழுத பயப்பட தேவையில்லை என்று கர்வமாகவும், இறுமாப்புடன் இருந்தது.. ஆமையை பார்த்து நீ எங்கே தேர்வில் தேர்ச்சி பெற போகிறாய்! நீயோ சோம்பேறி என்று கூறி ஏளனமாக சிரித்தது.


அதிக கர்வத்துடன் இருந்த முயல் நாம் தான் நன்றாக படித்து விட்டோமே, தேர்வுக்கு இரண்டு நாள் இருக்கிறது நாம் தொலைபேசியில் விளையாடலாம் என்று விளையாடியது. ஆமையோ நேரத்தை வீணடிக்காமல் படித்துக் கொண்டே இருந்தது. அதைப் பார்த்த முயலுக்கு சிரிப்புத் தான் வந்தது.

தேர்வும் வந்தது, இருவரும் தேர்வு எழுதினார்கள். தேர்வு முடிவு முயலுக்கு பேரதிர்ச்சியாக இருந்தது. ஆமை அதிக மதிப்பெண் பெற்று தேர்ச்சி பெற்று பள்ளியில் முதல் மாணவராக வந்தது. முயல் தோல்வி அடைந்து விட்டது.

மனமுடைந்த முயலைக் கண்ட ஆசிரியர் யாரையும் பார்த்து குறைத்து மதிப்பிடக் கூடாது, கர்வம் கொள்ளக் கூடாது என்று அறிவுரை கூறினார். இதற்கு பிறகு முயலும் ஆமையும் ஒன்றாக இணைந்து படிக்க ஆரம்பித்தார்கள்.



**G. அபிநயா**
7 ஆம் வகுப்பு. எண்ணூர்



# STUDENT FEEDBACK– CAREER GUIDANCE PROGRAM

I am M. Murugan, a 10th standard student from Chennai High School, Manikandamudali Street, Royapuram. I had the opportunity to attend theCareer Guidance Program organized by Arunodhaya and facilitated by Mr. Solomon. During the session, Mr. Solomon clearly explained the various career paths available after completing the 10th grade. He provided detailed information about different courses and streams in fields such as Engineering, ITI, Arts, and Management. The session was very informative and helped me understand the wide range of options available for my future.

After attending the program, I have decided to choose the Bio-Maths group for my 11th grade. This session helped me to focus on my goals and plan my future career with clarity and confidence. I am truly grateful for the guidance, and I am determined to work hard and build a successful future

**MI. முருகன்**
10 ஆம் வகுப்பு. இராயபுரம்

# எனது கருத்து

என் பெயர் N.தனலட்சுமி .நான் அருணோதயா சமூக முன்னேற்ற திட்டத்தில் கருத்தியல் வழி நடத்துனராக பணிபுரிகிறேன். சமூகம் மற்றும் குழந்தைகள் உரிமை கண்காணிப்பு குழு கூட்டத்தில் குழந்தைகளின் பிரச்சனைகளை விவாதிக்கும் போது குழந்தைகளின் பங்கேற்பு மிக அதிகமாக இருக்கும். அதை பார்க்கும் போது ஆச்சரியமாக இருக்கும். அவர்கள் பிரச்சனைகளை அவர்களே எடுத்து செய்வது மகிழ்ச்சியை தருகிறது.

குடி நீர் பிரச்சனை, வேகத்தடை அமைத்தல், கண்காணிப்பு கேமரா பொருத்துதல், சாலை சீரமைத்தல் போன்ற செயல்பாடுகளை மாமன்ற உறுப்பினர் மூலம் நிறைவேற்றி உள்ளார்கள். பகுதி அளவில் மட்டுமின்றி வார்டு அளவிலும் குழந்தைகள் பாதுகாப்பு குழு 38 மற்றும் 47வது வார்டுகளில் முதன் முறையாக உருவாக்கப்பட்டு உள்ளது. இதில் அனைத்து குழு உறுப்பினர்களும் கலந்து கொண்டது ஒரு சாதனையான விஷயமாக இருந்தது.



**N. தனலட்சுமி**
கருத்தியல் வழிநடத்துநர், அருணோதயா

இக்குழுவில் உள்ள குழந்தைககள் குழு கூட்டத்தின் வாயிலாக அவர்கள் பகுதியில் போதைப் பிரச்சனை அதிகமாக உள்ளது, பள்ளிக்கு செல்லும் வழியில் குடித்துவிட்டு பாட்டில்களை போடுவது, பெண் குழந்தைகளை கேலி, கிண்டல் செய்வது போன்ற செயல்களில் ஈடுபடுகிறார்கள் என்று காவல் துறையில் புகார் அளித்தார்கள்.

காவல்துறையும் உடனே நடவடிக்கை எடுத்து அந்தப் பகுதியில் தொடர் கண்காணிப்பு செய்கிறர்கள். இதன் விளைவாக அந்த தெருவில் இப்போது யாரும் குடித்துவிட்டு கலாட்டா செய்வதில்லை. இதை பார்க்கும் போது பெரியவர்களைவிட குழந்தைகளின் குரலுக்கு சக்தி அதிகம் என்பதை உணர்ந்தேன்.

இக்குழுவின் மூலம் பல பிரச்சனைகளை தீர்க்க முடியும் என்கின்ற நம்பிக்கையும் எனக்கு ஏற்பட்டுள்ளது. ஆகையால் மற்ற வார்டுகளிலும் குழந்தைகள் பாதுகாப்பு குழு உருவாக்கினால் ஒவ்வொரு வார்டையும் குழந்தை நேயவார்டாக உருவாக்க முடியும். நன்றி. வணக்கம்!

## வளரிளம் பருவத்தினருக்கு சில ஆலோசனைகள்!

வளரிளம் பருவத்தினர் தன உடலையும் மனதையும் தூய்மையாக பாதுகாத்து கொள்ள வேண்டும். தவறான பாதையில் போகாமல் இருக்க வேண்டும்.

**எடுத்துக்காட்டு**

- போதை பொருட்கள்
- இளவயது காதல்
- பாலியல் முயற்சி
- தவறான நண்பர்கள்

## பள்ளியில் வளரிளம் பருவத்தினருக்கான பாதுகாப்பு

அரசு பள்ளிகளில் வளரிளம் பருவத்தினருக்காக நாப்கின் மற்றும் சத்து மாத்திரைகள், பூச்சி கொல்லி மாத்திரைகள் கொடுக்கின்றனர். மேலும் இனப்பெருக்க மண்டலம், வளரிளம் பருவத்தினரின் மாற்றங்கள் போன்ற பாட திட்டங்கள் உள்ளன. அவற்றை எல்லாம் பயன்படுத்தி நாம் பாதுகாப்பாக வாழ்வோம்.

**H. சக்திராஜன்**
10 ஆம் வகுப்பு. எண்ணூர்





## எனக்கு பிடித்த பண்டிகை
# பொங்கல் பண்டிகை

பொங்கல் பண்டிகை வருவதற்கு ஒரு வாரம் முன்னாடி விட்டில் உள்ள அனைவருக்கும் அப்பா புத்தாடை எடுத்து கொடுப்பார்கள். நாங்கள் அனைவரும் துணிக் கடைக்கு சென்றோம். எனக்கு பிடித்த சல்வார் நான் வாங்கினேன், அம்மாவுக்கு புடவை, அப்பாவிற்கு வேட்டி, சட்டை, தம்பிக்கு ஜீன்ஸ், தங்கைக்கு பாவாடை, சட்டை என அனைத்தும் வாங்கி வந்தோம். பொங்கல் எப்போது வரும் புத்தாடையை எப்போது அணிவோம் என்று காத்து கொண்டு இருந்தோம். புத்தாடையை ஒரு நாளைக்கு பத்து முறை எடுத்து பார்ப்பது என்று இருந்தோம்.

பொங்கல் பண்டிகையும் வந்தது. அம்மா அன்று விடியற்காலை அனைவரையும் எழுப்பினார். எல்லோரும் எழுந்திருங்கள் குளித்துவிட்டு புத்தாடையை போடுங்க என்ற குரல் கேட்டவுடன் எழுந்து முதல் ஆளாக குளிக்க சென்றேன்.

**N. ஸ்ரீநிஷா**
11 ஆம் வகுப்பு. தண்டையார்பேட்டை



அனைவரும் புத்தாடை அணிந்தோம். அன்று வீட்டில் விதவிதமான உணவு வகைகள், சர்க்கரை பொங்கல், உளுந்து வடை, பாயசம், கரும்பு, என சிறப்பு உணவுகளை அம்மா தயார் செய்து கொண்டிருந்தார்கள். நானும் எனது தம்பி, தங்கைகளும் புத்தாடைகள் அணிந்து கொண்டு எங்கள் நண்பர்கள் அனைவருக்கும் காட்டி கொண்டு இருந்தோம், எனது நண்பர்களும் அவர்களின் புத்தாடைகளை காட்டினார்கள். அனைவர் முகங்களிலும் ஒரு இனம் புரியாத மகிழ்ச்சி. பிறகு என் அத்தை, மாமா எங்கள் வீட்டிற்கு வந்தார்கள். மகிழ்ச்சி அதிகமானது. சூரியனின் முன்பு பொங்கல், கரும்பு, பூசணிக்காய் போன்றவற்றை படைத்து வழிபட்டோம். பிறகு அனைவரும் உணவு அருந்தினோம். பிறகு கரும்பு, உளுந்துவடை போன்றவற்றை நண்பர்களுடன் சேர்ந்து சாப்பிட்டோம், பொங்கல் பண்டிகை விடுமுறை தொடர்ந்து நான்கு நாட்கள் வரும், எனவே நாங்கள் பக்கத்து ஊரில் உள்ள அத்தையின் வீட்டிற்கு சென்றோம். இப்படி மிகவும் மகிழ்ச்சியாக பொங்கல் பண்டிகையை கொண்டாடினோம்.. பொங்கல் விழா முடிந்ததும் மீண்டும் எப்போது வருமென நினைத்து கொண்டே பள்ளிக்கு சென்றோம்.

# புத்தாண்டை வரவேற்போம்

ஆங்கில வருடப்பிறப்பு என்றாலே அனைவருக்கும் ஒரு குதூகலம். ஜாதி மதம் பேதமின்றி கொண்டாடும் ஒரு நாள். இரவெல்லாம் கண்விழித்து புத்தாண்டை வரவேற்க காத்திருப்போம். நடு இரவில் பிடித்த இறைவனை வழிபட்டு, அனைவருக்கும் வாழ்த்துக்கள் கூறி மகிழ்வோம்.

நான் புத்தாண்டை எப்படி கொண்டாடினேன் என்று உங்களிடம் பகிர்ந்து கொள்கின்றேன்.

தமிழ் மாதம் மார்கழியில் தான் ஆங்கில வருடபிறப்பு வரும். உங்களுக்கே தெரியும் மார்கழி மாதம் குளிர் எப்படி இருக்குமென்று. நாங்கள் எங்கள் வீட்டு வாசலில் மார்கழி மாதம் முழுவதும் பெரிய கோலங்கள் போடுவோம். அதற்கு வண்ணக் கலர் கொடுத்து அழகாக அலங்கரிப்போம். கோலம் போட்டு முடிந்தவுடன் அடுத்த வீட்டில் உள்ள எனது தோழிகள் எவ்வாறு கோலம் போட்டு உள்ளனர் என்பதை வேடிக்கை பார்ப்போம்.


டிசம்பர் **31** அன்று ஊரில் யாரும் இரவு தூங்க மாட்டார்கள். ஏனென்றால் புத்தாண்டை வரவேற்க தயாராக இருப்போம். நடு இரவு 12 மணிக்கு இனிய புத்தாண்டு வாழ்த்துக்கள் (Happy New year) என்று ஒருவருக்கொருவர் இனிப்புகள் வழங்கி வாழ்த்துக்கள் சொல்லிக் கொள்வோம். எங்கள் ஊர் கோவில்களில் பக்தி பாடல்கள் முழங்க அபிஷேகம், ஆராதனை நடைபெறும். எங்கள் குடும்பத்திலும் அனைவரும் நடு இரவில் குளித்து விட்டு கோவில்களுக்கு சென்று வழிபாடுகள் செய்தோம்.

புத்தாண்டு அன்று நான் என்ன கேட்டாலும் வாங்கி தருவார்கள் எங்கள் பெற்றோர். மெரினா கடற்கரைக்கு எங்களை அழைத்து சென்றார்கள். நானும் எனது தம்பியும் இராட்டினம் சுற்றினோம்.

வெளியூரில் உள்ள எங்கள் உறவினர்களும் தொலைபேசியில் தொடர்பு கொண்டு வாழ்த்துக்கள் கூறினார்கள். ஜில் என்ற குளிரில், இரவில் கொண்டாடும் ஆங்கில புத்தாண்டு எனக்கு மிகவும் பிடிக்கும்.



**S. மோனிகா**
12 ஆம் வகுப்பு. திருவொற்றியூர்



# நான் பெற்ற பரிசுகளே என் திறமைக்கு சான்று

என் பெயர் S. ரோஷன் நான் மணிகண்ட முதலி தெரு சென்னை உயர்நிலைப் பள்ளியில் 7 ஆம் வகுப்பு படித்து வருகின்றேன். எனது பள்ளி எனக்கு மிகவும் பிடிக்கும். முதலாம் ஆம் வகுப்பிலிருந்தே நான் இந்த பள்ளியில் தான் படித்து வருகின்றேன்.



சிறு வயதிலிருந்தே எனக்கு கேரம் போர்டு விளையாட்டில் அதிக ஆர்வம் இருந்தது. அதனால் முதலில் பகுதியளவு நண்பர்களுடன் சேர்ந்து விளையாடினேன். பின்பு நம் அருணோதயா மூலம் கொடுத்த கேரம் போர்டில் விளையாடி பயிற்சி பெற்றேன். என்னுடன் சேர்ந்து எனது பகுதியில் என் நண்பர்களும் கேரம் ஆடுவதில் ஆர்வம் காட்டினார்கள். அதை அறிந்த எங்கள் பகுதியில் உள்ள ஒரு கேரம்போர்டு பயிற்சியாளர் எங்களுக்கு தினமும் பள்ளி நேரம் முடிந்தவுடன் பயிற்சி அளித்தார். அவர் மூலம் மற்ற பகுதியில் பயிற்சி பெற்ற குழந்தைகளுடன் நங்கள் போட்டியிட்டு வெற்றி பெற்றோம்.

நான் பெற்ற பரிசுகளை என் அருணோதயா குழந்தைகள் சங்க குழந்தைகளிடமும், எனது அருணோதயா பணியாளர் திருமதி. ருக்மணி மேடம், நான் படிக்கும் பள்ளியிலும் காட்டுவேன். எனது பள்ளி ஆசிரியர்கள், அருணோதயா பணியாளர்கள் எனக்கு ஊக்கமளித்து வருகின்றனர். நான் கலந்து கொண்ட அனைத்து போட்டிகளிலும் வெற்றி பெற்றேன். மாவட்ட அளவில் நடந்த போட்டியிலும் நான் வெற்றி பெற்றேன்.

தற்போது நான் மாநில அளவில் நடைபெற்ற கேரம் போர்ட் போட்டியில் கலந்து கொண்டு மாநிலத்திலேயே நான் 7 ஆம் இடத்தை பெற்றுள்ளேன். போட்டிகளில் கலந்து கொண்டு வெற்றி பெறுவது என் தன்னம்பிக்கையை அதிகப்படுத்துகின்றது. எனக்கு ஊக்கமளித்த அருணோதயா மற்றும் பள்ளி ஆசிரியர்கள், பகுதிமக்கள் அனைவருக்கும் என் மனமார்ந்த நன்றியை தெரிவித்துக் கொள்கின்றேன்.



**S. ரோஷன்**
7 ஆம் வகுப்பு. இராயபுரம்




## கல்வி கவிதை

கல்வி கற்போம்
கனவை நனவாக்குவோம்
கல்வி என்னும் கடலில்
பள்ளி எனும் படகில்
ஆசிரியர் எனும் துடுப்பில் - நாம்
பயணம் செய்தால்
வெற்றி நிச்சயம்!!



**E. மிதுல்லா**
கல்லூரி முதல் ஆண்டு, எண்ணூர்

# மாற்றி யோசி

## சிறுகதை

பறவைகள் என்றாலே அவைகள் ஒற்றுமை உணர்வுடன் இருப்பதை நாம் பல நேரங்களில் கவனித்து உள்ளோம். எடுத்துகாட்டு காகம். கிடைத்த உணவை ஒற்றுமையுன் உண்பதை நாம் கவனித்து இருக்கிறோம் உண்மை தானே?



ஒரு காட்டில் காகம் ஒன்று வசித்து வந்தது. அது மிகவும் புத்திசாலி காகம். அது காட்டில் எதை பற்றியும் யோசிக்காமல் மகிழ்ச்சியாய் வாழ்ந்து வந்தது. ஒரு சமயம் அந்த காட்டில் பயங்கரமான வறட்சி ஏற்பட்டது. குளம், குட்டை, ஏரி போன்றவை வறண்டு கடும் தண்ணீர் தட்டுப்பாடு ஏற்பட்டது. பறவைகள் எல்லாம் காட்டைவிட்டு வேறு இடங்களுக்கு பறந்து சென்று விட்டது. புத்திசாலி காகமும் நகரத்திற்கு பறந்து வந்தது. மனிதர்கள் வாழும் இடத்திற்கு அருகாமையில் வந்து வாழ்ந்தது. ஒருநாள் அதற்கு தண்ணீர் தாகம் எடுத்தது. சுற்றும் முற்றும் பார்த்தது, எங்கும் தண்ணீர் இல்லை மிகவும் தாகமாக இருந்த காகம் தண்ணீரை தேடித்தேடி கலைத்துப் போனது.


தூரத்தில் மனிதர்கள் குடித்து தூக்கிப் போட்ட தண்ணீர் பாட்டில் இருந்தது ஆனால் அதில் தண்ணீர் மிகவும் குறைவாக இருந்தது. காகம் யோசித்தது எப்படி அந்த தண்ணீரை குடிப்பது என்று ! காகம் தலையை சாய்த்து சாய்த்து அங்கும் இங்கும் பார்த்து. தூரத்தில் ஒரு ஸ்ட்ரா ஒன்று கிடந்தது. காகம் அந்த ஸ்ட்ராவை எடுத்து வந்து அந்த பாட்டிலில் போட்டு இருந்த தண்ணீரை அருந்தி விட்டுச் சென்றது.

எங்கேயோ கேட்ட கதை போல் உள்ளது அல்லவா! அந்தகதையில் வந்த காகம் வேறு விதமாக யோசித்தது, இந்த கதையில் உள்ள காகம் வேறு விதமாக யோசித்தது. ஆனால் நோக்கம் ஒன்று தான்.

ஆம் நண்பர்களே!! நோக்கம் ஒன்று தான் என்றாலும் புதிதான, வித்தியாசமான, யுக்திகளை கையாண்டு நம் லட்சியத்தை அடைய நாம் முயற்சிக்க வேண்டும்.



**R. ஹரிணி**
9 ஆம் வகுப்பு. இராயபுரம்







பாலியல்
தொல்லை


அ ஆ இ
ஈ உ ஊ
குழந்தை திருமணம் செய்ய கூடாது


A. Muhamathu
Yusuf
sulthan
class: +1
திருவொயியூர்

# N Chennai kids lead civic engagement through area sabhas

Padmaja J@timesofindia.com

**Chennai:** "We want a police booth, library, and more CCTV cameras in our area to tackle increasing theft cases," declared Yuvarani, a Class XI student and 'child councillor' of Ward 38, during a child 'area sabha' at a Greater Chennai Corporation school in Patel Nagar, Tondiarpet.

It was the fourth area sabha in the ward, and more than 100 children, parents, and caregivers attended. Officials including representatives from police , child protection committee, and school authorities, heard their demands. "We will try to address your demands and set up more CCTV cameras," said Vijayakumar of Korukkupet police station.

While most wards skipped area sabhas that are to be conducted on Jan 25, children of wards 3, 6, 7, 9, 37, 38, 41, 47, 52, and 53 in North Chennai came together for their mini-area sabhas.

Yuvarani, elected child councillor a year ago, said that apart from raising civic issues, she also address challenges such as school dropouts and drug abuse. "Today's concerns will be presented to our ward councillor."

The sabhas have tangible impacts. "During our first meeting, officials dismissed our complaints about defunct streetlights. When we questioned their inaction at the next sabha, the lights were fixed," said Selvi of Arunodhaya Centre for Street and Working Children, the NGO organising these gatherings. The child sabha also led to a taller school boundary wall and increased police patrols.

TOI



**HEARING THEIR DEMANDS:** Children nagara sabha at GCC school, Patel Nagar, Tondiarpet

The sabha also flagged off the first ward-level child protection committee in the city. "This committee, formed in Feb 2024, has held four meetings, and drug abuse is the most pressing problem among children," said Virgil D Sami, the NGO's executive director.

But the child sabha model is yet to be formally adopted by the govt. "Just as Kerala's Kudumbashree initiative institutionalised child sabhas, TN should formalise this," said Selvi.

உங்கள் படைப்புகளையும், செய்திகளையும், கருத்துக்களையும்
வாழ்த்துக்களுடன் வரவேற்கிறோம்